JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//212 /2024 |
| | : | Prosecution P.W - 12 |
| NAME | : | பால்ராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 07.08.2024

முதல் விசாரணை

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்ட Q பிரிவு குற்றப்புலாண்வுதுறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கடையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 05.05.2016 அன்று அதிகாலை 1.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.கந்தசாமி கடையம் காவல் நிலையக் குற்ற எண் 113/2016 இ.த.ச பரிவு 394 என வழக்கு பதிவுசெய்த எனது விசாரணைக்கு முதல் தகவல் அறிக்கை நகலைபெற்றுக்கொண்டு அதிகாலை 2.00 மணிக்கு சம்பவ இடமான கடையம் முதல் ராம்நகர் சாலையில் திருமலையப்பபுரம் விலக்கிற்கு கிழக்கு பக்கம் 400 மீட்டர் துரத்தில் நடந்த சம்பவ இடத்தை சாட்சிகள் கணேஷ், அருள்ஜோசப் ஆகியோர் முன்பு ஆலயவிளக்கு வெளிச்சத்திலும் , காவல் நிலைய நான்கு சக்கர வாகனத்தின் விளக்கு வெளிச்சத்திலும், பார்வைமகஜர், மாதிரிவடைபடம் தயார் செய்தேன். பின்னர் 3.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு வழக்கு பாதிக்கப்பட்ட டென்னீஜ் ஏசுராஜன், மற்றும் அவரது மனைவி சம்பவத்தின் போது வந்த இருசக்கர வாகனம் பதிவு எண். TN76D1575 என்ற பதிவெண் கொண்ட Scooty இருசக்கரவகனத்தினை அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர்

பாதிக்கப்பட்ட டென்னிஸ் ஏசுராஜன் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைபெற்றுவந்த ஆவுடையானுர் C.J. மருத்துவமனைக்கு சென்று அசா1 மற்றும் அசா2 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் அதிகாலை 5.00 மணிக்கு சம்பவத்தின்போது எதிரிகள் பறித்துக்கொண்ட பின்பு தன்வசம் கிடைத்த மீதமான தங்க நகையை 32 கிராம் உள்ள செயினை சாட்சிகள் அடைக்கல ஜோசப்ராஜ் மற்றும் இருதய பிரகாஷ் ஆகியோர் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் சம்பவத்தை நேரில் பார்த்த அமல்ராஜ் மற்றும் ராமர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் சாட்சிகள் கணேசன், அருள்ஜோசப், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கந்தசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் 24.06.2016 ம் தேதி பாதிக்கப்பட்ட டென்னிஸ் ஏசுராஜன் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சைசெய்த தென்காசி அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அலுவலர் டாக்டர். முகமது இம்ரான் என்பவரை விசாரித்து அவரிடம் காயச்சான்று பெற்றேன். பின்னர் அவருக்கு மேல்சிகிச்சை அளித்த C.J. மருத்துவமனை மருத்துவர் டாக்டர் தர்மராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 08.11.2016 ம் தேதி திருநெல்வேலி தாலுகா காவல் நிலைய காவல் ஆய்வளார் திருநெல்வேலி தாலுகா காவல் நிலையக்குற்ற எண் 326/2016 இதச பிரிவுகள் 294(b), 332. 353, 307, 506(ii) கீழான வழக்கில் எதிரி ரமேஷ் என்ற ரமையா தந்தை பெயர் சுவர்வணம் கொண்டாநகரம் சுத்தமல்லி என்பவரை மேற்படி வழக்கில் கைது செய்து விசாரித்தபோது எதிரி தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்மூலத்தில் மேற்படி கடையம் காவல் நிலையக்குற்ற எண்.113/2016 எதிரி ரமேஷ் என்ற ராமையாவும் அவருடன் மாரியப்பன் தந்தைபெயர் அர்ச்சுணன் சிவன்கோவில் தெரு கொண்டாநகரம் மற்றும் எதிரி ராஜகோபால் த/பெ.ராமையா தேசமாணிக்கம் ஆகியோர் சம்மந்தபட்டிருப்பதாக தகவல் தெரிவித்ததன் பேரில் காவல்நிலையத்தில் இருந்து முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் நகல் பெற்று நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்கள், ரமேஷ் என்ற ராமையா, மாரியப்பன், ராஜகோபால் என்று சிறப்பு அறிக்கை தாக்கல் செய்தேன். 21.01.2016 அன்று திருநெல்வேலி தாலுகா காவல் நிலையக்குற்ற எண் 326/2016 என்ற வழக்கில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நீதிமன்ற அடைப்பு காவல் செய்யப்பட்டிருந்த எதிரி ரமேஷ் என்ற ராமையையாவை ஜெயிலர் முன்பு 16.05 மணிக்கு எதிரியிடம் இந்த வழக்கு பற்றி தெரிவித்து சம்பிரதாய கைது செய்தேன். பின்னர் 16.10 மணிக்கு சுத்தமல்லி காவல் நிலையக்குற்ற எண் 207/2016 இதச பிரிவு 294(b), 341, 387, 506(ii)

IPC வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்த எதிரி மாரியப்பனை காரணம் கூறி திருநெல்வேலி பாளையங்கோட்டை மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்தேன். 22.11.2016 ம் தேதி மேற்படி ரமேஷ் மற்றும் மாரியப்பனை நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்த PT warrant வேண்டுகோள் வைத்தேன். அதன்படி 29.11.2016 ம் தேதி PT warrant மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றகாவலுக்கு உட்படுத்தினேன். அதே தேதியில் எதிரிகள் ரமேஷ் என்ற ராமையா மற்றும் மாரியப்பனை போலிஸ் காவலுக்கு அளிக்ககோரி மனு அனுமதிக்கப்பட்டு ஒரு நாள் போலிஸ் காவல் வழங்கினார்கள். அதே நாளில் எதிரிகளை கடையம் காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்தபோது எதிரி ரமேஷ் என்ற ராமையா தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குத்தாலிங்ம் மற்றும் தங்கமணி முன்பு பதிவுசெய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கில் ரமேஷ் என்ற ராமையா மற்றும் மாரியப்பன் மட்டுமே சம்பந்தபட்டிருப்பதாக வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரியின் ஊருக்கு அருகில் உள்ள மாரியம்மன்கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் இந்த வழக்கிற்கு சம்பவத்திற்கு அரிவாளையும் சம்பவத்தின்போது பறித்துக்கொண்ட டாலருடன் கூடிய தாலிச்செயினின் 40 கிராம் எடையுள்ள பகுதியை மேற்படி சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் எதிரிகளுடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் உடன் நிலையம் வந்து சாட்சிகள் குத்தாலிங்கம் மற்றும் தங்கமணி ஆகியோரை விசாரித்தது வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரிகள் இருவரையும் மறுநாள் 30.11.2016 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 05.12.2016 ம் தேதி சாட்சிகள் எதிரிகளை அடையாளம் காட்டும் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு சேரன்மகாதேவி மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கொடுத்து 19.12.2016 ம் தேதி சாட்சிகள் ஜான்சி மற்றும் டென்னிஸ் ஏசுராஜனை வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தினார்கள். பின்னர் அதே நாளில் மேற்படி இருசாட்சிகளையும் காவல் நிலையத்திற்கு அழைத்து எதிரியிடமிருந்து கைப்பற்றிய நகையை அடையாளம் காட்டினார்கள். அதே நாளில் சாட்சிகள் இருவரையும் விசாரித்து கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.12.2016 ம் தேதி பாதிக்கப்பட்ட நபர் மருத்துமனையில் இருந்து ஒப்படைத்த நகையை கைப்பற்றும்போது சாட்சிகளாக இருந்த அடைக்கலஜோசப் ராஜ், மற்றும் இருதய பிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அதே நாளில் கைப்பற்றப்பட்ட அனைத்து பொருட்களையும் படிம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.10 ஆகவும், 40

கிராம் செயினின் பகுதி மற்றும் அருவாளை ஒப்படைத்த படிவம் 91 அ.சா.ஆ.11 ஆகவும், 32 கிராம் செயினின் பகுதி ஒப்படைத்த படிவம் 91 அ.சா.ஆ.12 ஆகவும், அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதேநாளில் அரிவாள் புகைப்படம் அசா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. CJ மருத்துவமனையில் வழங்கயி காயச்சான்று அ.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் ரமேஷ் என்ற ராமையா மற்றும் மாரியப்பன் மீது இதச பிரிவு 394, கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

நான் சொன்னது போல் சொன்ன நாளில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சொன்னது போல் சொன்ன நாளில் நேரத்தில் சொன்ன இடத்தில் பார்வைமஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்யவில்லை என்றாலும் நான் சொன்னது போல் சம்பிரதாய கைது செய்யவில்லை என்றாலும் நான் சொன்னது போல் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் அதன் பேரில் எந்த சான்றுபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் நான் சொன்னது அச1, அசா2 ஆகியோர்களை வைத்து சொன்ன விதத்தில் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து அசா1 கொடுத்த பொய்புகாரின் பேரில் எதிரிக்கு எதிரிராக தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் ,இந்த வழக்கிற்கும் சம்பந்தமில் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi